கோரிக்கை எண் 4 – ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 4 – ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகின்றேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.696,11,77,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.72,58,99,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 21–4–2008 (திங்கட்கிழமை) காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–06 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

12. 2006–2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் முப்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

43. 2006–2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகத்தின் இருபத்து நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

78. மானியக் கோரிக்கை எண் 4 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2008–2009. (தமிழ், ஆங்கிலம்)

79. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய வரவு-செலவு செயலாக்கத் திட்டம், 2008–2009. (தமிழ், ஆங்கிலம்)

80. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய “மக்கள் சாசனம்”, 2008–2009. (தமிழ், ஆங்கிலம்)

81. 2006–2007 மற்றும் 2007–2008 ஆம் ஆண்டுகளில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின்மீது நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் விவரம். (தமிழ்)

82. 2006–2007 மற்றும் 2007–2008 ஆம் ஆண்டுகளில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின்மீது நகராட்சி நிருவாக ஆணையரகத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் விவரம். (தமிழ்)

83. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு அடுத்து அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் வழங்குவது தொடர்பாக பரிசீலிக்க அமைக்கப்பட்ட உயர்நிலைக் குழுவின் பரிந்துரைகளின்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளின் விளக்கக் குறிப்பு. (தமிழ்)

84. நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் போது மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2008–2009. (தமிழ்)

85. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2008–2009. (தமிழ்)